**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 768/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.** 1 |
| Name | : | **சுந்தரராசு** |
| Father's / Husband Name | : | பெரியசாமி |
| Address | : | தம்பிராண்பட்டி |
| Age | : | 50/2026 |

**தேதி : 24.06.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ஆ. சத்தியபாமா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தம்பிராண்பட்டியில் வசித்து ட்ரைவராக வேலை செய்து வருகிறேன். என்னுடைய மகன் அரவிந்த் என்பவர் கடந்த ஆண்டு தனியார் கல்லூரி ஒன்றில்படித்து கொண்டிருந்தார். அவருடன் மற்ற இரண்டு நண்பர்கள் இருசக்கர வாகனத்தில் சென்றபோது கலத்தூர் சாலையில் விபத்து ஏற்பட்டதாகவும், அந்த விபத்தில் கார் ஒன்று ஈடுபட்டதாகவும் கேள்விப்பட்டேன். இருசக்கர வாகனத்தில் சென்ற எனது மகனையும், மற்ற இருவரையும் மருத்துவமனையில்சேர்த்திருப்பதாக தகவல் வந்தது. சம்பவ நாள், மாதம், வருடம், நேரம் எனக்கு நினைவில்லை.

எனது மகன் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு எண் மற்றும் விபத்து ஏற்படுத்தியாக சொல்லும் காரில் பதிவு எண், அதன் ஓட்டுநர் பற்றி ஞாபகமில்லை. துறையூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த என்னுடைய மகன் சிகிச்சை பலனின்றி அன்றே இறந்துபோய்விட்டார். நான்

போலீஸாரிடம் விபத்து குறித்து புகார் ஒன்று கொடுத்தேன். அதிலுள்ள கையெழுத்து அ.த.சா.ஆ– 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை. இந்தவ ழக்கு சம்பவம் குறித்து எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் ஆகிவிட்டேன். வழக்கினை எதிரிக்கு எதிராக நடத்த நான் விரும்பவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வைத்த கோரிக்கையை ஏற்று சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 25.01.2025ம் தேதியன்று TN 46 V 7333என்ற இருசக்கர வாகனத்தின் கிழக்கிருந்து மேற்கு நோக்கி ட களத்தூர் பிரிவு ரோட்டில் மேற்படி வாகனத்தை தீபன்ராஜ் என்பவர் ஒட்ட அவருக்கு பின்னால் எனது மகன் அரவிந்த் அமர்ந்தும், மூன்றாவதாக கவிமணி என்பவர் அமர்ந்துகொண்டு சாலையில் இடதுபுறமாக சென்றபோது அதே சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி TN 57 AJ 9316 என்ற வாகனத்தை எதிரி அஜாக்கிரதையாக, கவனக்குறைவாக ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி இருசக்கர வாகனத்தில் சென்ற மூவருக்கும் காயம் ஏற்பட்டு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்து சென்றிருப்பதாக தகவல் வந்ததன் பேரில் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது மகன் அரவிந்த் என்பவருக்கு வலதுபக்க தொடையில் காயம் ஏற்பட்டும், தலையில்அடிப்பட்டும், தீபன்ராஜ் என்பவருக்கு வலது கால், இடது கால் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டதாகவும், கவிமணி என்பவருக்கு வலது கால்இடுப்பு ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டிருப்பதாகவும் சிகிச்சை பலனின்றி இறந்துபோய்விட்டதாகவும் போலீஸாரிடம் புகாரும், அதன் பின்னிட்டு சம்பவத்தை அனுசரித்து வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது நீதிமன்றத்திற்கு வெளியே எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டு தற்போது

எதிரியை காப்பாற்ற எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

THAARINI V C

Digitally signed by THAARINI V C
Location: Judicial Magistrate No.1, Perambalur
Date: 2026.06.24 15:47:07 +0530

Judicial Magistrate No.1
Perambalur.